DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, COONOOR

**Case No: STC No.454/2026**

Prosecution witness **PW.2 (LW.5)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | Saroniya | Caste | : | |
| Husband Name | : | Kulanthaivel | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | 33 |
| Time | : | | | | |

**(A1, A3 present. A2 absent. Petition filed and allowed for A2. Accused counsel present)**
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of **27.07.2026**

**27.07.2026 முதல் விசாரணை** :

1. நான் தற்போது நீலகிரி மாவட்டம், சிங்கபெண் சிறப்பு அதிரடி படையில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு குன்னூர் நகர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த போது 28.03.2026 ம் தேதி மாலை 06.00 மணியளவில் நான் காவல் நிலைய அலுவலில் இருந்த போது குன்னூர் நகர கிராம நிர்வாக அலுவலர் ரெவின்குமார் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவினை பெற்று நிலைய குற்ற எண்.52/2026 சட்டப்பிரிவுகள் 287 பி.என்.எஸ் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் (**அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). பின்னர் வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சாட்சிகள் ரெவின்குமார், அப்துல் மஜித், வில்லியம் சாமுவேல், மைதீன் பாஷா ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

2. பின்னர் எதிரிகளுக்கு பிரிவு 35(3) BNSS ன் கீழ் அழைப்பாணை சார்வு செய்து அவர்களை விசாரித்தேன். பின்னர் வழக்கு விசாரணையை முடித்து 19.05.2026 ம் தேதி எதிரிகள் மீது அதே சட்டப்பிரிவுகளின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>குறுக்கு விசாரணை</u>

1. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் பொதுஜன நடமாட்டம் அதிகம் உள்ள பகுதி என்றால் சரிதான். நான் இந்த வழக்கில் எந்த பொதுஜன சாட்சியையும் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு நான் மாலை 06.05, 06.10 மணிக்கு சென்றுவிட்டேன். அப்போது அந்த இடத்தில் சுமார் 50, 60 நபர்கள் இருந்திருப்பார்கள்.

2. இந்த வழக்கு சம்பந்தமாக நான் எந்தவொரு வெடிபொருட்களையும் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். சம்பவயிடத்தில் பார்வை மகஜரோ மாதிரி வரைபடமோ தயார் செய்யவில்லை என்றால் சரிதான். சம்பவயிடத்திற்கு அருகிலேயே புறக்காவல் நிலையம் உள்ளது என்றும், அங்கு எப்போதுமே போலிசார் பணியில் இருப்பார்கள் என்றால் சரிதான். புறக்காவல் நிலையத்திலுள்ள காவலர்களுக்கு சட்டவிரோத நிகழ்ச்சி ஏதாவது நடந்தால் சம்பந்தப்பட்ட நபர்களை கைது செய்ய அதிகாரமுள்ளது என்றால் இல்லை. அவர்கள் தகவல் மட்டும் தான் கொடுப்பார்கள். சம்பவம் நடந்ததாக அவர்கள் நிலையத்திற்கு தகவல் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

3. புகாரில் சாட்சிகள் பற்றி கூறவில்லை என்றால் சரிதான். காலதாமதத்திற்காக காரணத்தை புகாரிலோ வாக்குமூலத்திலோ புகார்தாரர் கூறவில்லை என்றால் சரிதான். சம்பவ சமயத்தில் தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலில் இருந்தற்கான ஆவணங்கள் எதையும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். புகைப்படம் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். தேர்தல் நடத்தை விதிமுறைகள் 06.06.2026 ம் தேதியுடன் முடிந்துவிட்டது என்றால் சரிதான்.

4. தொடர்ச்சியாக இந்த வழக்கை நடத்துவதற்கு நான் தேர்தல் ஆணையத்திடம் நான் எவ்வித அனுமதியும் பெறவில்லை என்றால் சரிதான். தேர்தல் நடத்தும் அதிகாரிகளின் அறிவுறுத்தலின் பேரில் ஒரு புள்ளிவிவர

**கணக்கிற்காக எதிரி மீது பொய்யாக வழக்கு பதிவு செய்து சரிவர விசாரிக்காமல் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.**

**மறுவிசாரணை – இல்லை.**

Sd/- Tmt.R.Geetha B.A. B.L.,
Judicial Magistrate (FAC),
Coonoor.